பக்கங்கள்:08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 28 சனிக்கிழமை 13.09.2025 கதிர் 307

## இனிது ரகசியம் அல்ல!

இப்போதைக்கு நாட்டில் பரபரப்பானகதையாடல்களுக்குரியது என்றால் அது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுதான். என்பிபி ☞2

## இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவை சுயாதீனமாக்கக் கொள்கை முடிவு வேண்டும்

### ஹர்ஷ டி சில்வா எம்.பி. வலியுறுத்து

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை தொடர்பில் ஆளும்தரப்பு கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்கவேண்டும். தேசிய கணக்காய்வாளர் திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் திணைக்களம் வரவு, செலவுத் திட்ட வகுப்பின் போது நாடாளுமன்றத்தில் இருந்து விடுபடவேண்டும். அப்போதுதான் இவ்விரு நிறுவனங்களின் சுயாதீனம் பாதுகாக்கப்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணைகள் ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மை தொடர்பில் ஆளும்தரப்பு கொள்கை ரீதியில் தீர்மானம் எடுக்க வேண்டும். அரசநிதி பற்றிய குழுவில் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடினோம்.

2024 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட அரச நிதி முகாமைத்துவ சட்டம் அதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட ☞3

## மீனவர் ஓய்வூதிய திட்டம் நவம்பர் 21இல் அறிமுகம்

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை மூடப்போவதில்லை. சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டுஎதிர்வரும்நவம்பர் 21மீனவர்களுக்கான ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும். நட்டத்தில் இயங்கிய கடற்றொழில் கூட்டுத்தாபனம் தற்போது இலாபமடைந்துள்ளது என கடற்றொழில் பிரதி அமைச்சர் ரத்ன கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேதமாச முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைகடற்றொழில் கூட்டுத்தாபனம்1700 மில்லியன் ரூபா கடன்களை எதிர்கொண்டிருந்த நிலையில்தான்நாம்அதனைப்பொறுப்பேற்றோம். கூட்டுத்தானம் மீனவ வர்த்தகர்களுக்கு 700 மில்லியன் ரூபாவை செலுத்த ☞3

## எங்கிருந்தாலும் மகிந்த மகிந்ததான் நாட்டில் இன்று அரச பயங்கரவாதம்

### இப்படிச் சொல்பவர் வேறுயாருமல்லர் மகிந்தரேதான்

சிங்கக் கொடியின் நிழலின் கீழ் உள்ள ஒற்றைதாய்நாட்டிற்கு யாரேனும் துரோகம் செய்தால்,எந்தவொரு துன்புறுத்தல்களுக்கு மத்தியிலும் நான் எழுந்து நிற்பேன். கிருவப்பத்துவவில் உள்ள மஹிந்த ராஜபக்சவுக்குஅரசியல் அச்சுறுத்தல்களும், இடி முழக்கங்களும் நன்கு



பழக்கப்பட்டவை.மஹிந்தராஜபக்ச விஜேராமவில் இருந்தாலும், ☞2

## ஈ-வீசாவை எதிர்த்து நீதிமன்றில் 8 மனுக்கள் இதுவரையும் தாக்கல்

இந்த இலத்திரனியல் வீசா விநியோக முறைமையைச் சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் 08 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் தற்போது நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. நீதிமன்றத்தின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன முன்வைத்த கேள்விகளுக்கான விடையை பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால சபைக்கு அளிக்கை செய்தார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஜி.பி.எஸ்தொழில்நுட்ப சேவை மற்றும் ஐவிஸ் குளோபல் மற்றும் வி.எப்நிறுவனம் மற்றும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கத்துக்கு இடையில் நிகழ்நிலை முறைமை ஊடாக விசா விநியோக சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் 2024.07.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட அறிக்கை (1:10) பிரகாரம் தடயவியல் கணக்காய்வினை மேற்கொள்ளுமாறு கணக்காய்வாளர் திணைக்களம் பணிப்புரை விடுத்துள்ளது.

கணக்காய்வாளர் திணைக்களம் இவ்விடயம் தொடர்பில் விசேட கணக்காய்வினை மேற்கொண்டு அந்த வரைவை இறுதி மதிப்பீட்டுக்காக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் இறுதி மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு அறிக்கை 2025.09.17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்படும் - என்றார். ☞3

## ராஜபக்சக்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் இன்றைய ஆட்சியில் முக்கிய பதவிகளில்

### உண்மைகள் வெளிவரும் என்று ஆளும்தரப்புக்கு அச்சம் என்கிறார் முஜிபுர்

ராஜபக்சக்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் இந்த ஆளும்தரப்புத்தில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர். 2018ஆம் ஆண்டில் 52 நாட்கள் ஆட்சியின் போதுதான் தற்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் கிழக்கு கட்டளைத்தளபதியாகநியமிக்கப்பட்டார். இவ்வாறானகாரணிகள்வெளியேவரும் என்ற அச்சத்திலேயே விவாதத்தை நிறுத்துவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய பிரதி பாதுகாப்பு அமைச்சர் கிழக்கு கட்டளை தளபதியாக பதவி வகித்த ☞3

## எதிர்க் கட்சித் தலைவர் முறைகேடாக நடக்கிறார்

### அமைச்சர் நளிந்த நாடாளுமன்றில் குற்றச்சாட்டு

நிலையியற் கட்டளை 27 / 2 இனைப் பயன்படுத்தி எதிர்க் கட்சித் தலைவர் முறைகேடாக நடக்கிறார். கேள்விகளை கேட்கும் போது அநுரகுமார திஸாசாயக்க கடந்த நாடாளுமன்றத்தில் செயற்பட்டதைஒருமுன்னுதாரணமாக கடைப்பிடிக்கவேண்டும். ☞2

## அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்க்கும் இஸ்ரேலுடன் எந்த நட்புறவும் இல்லை

### எதிர்க் கட்சித் தலைவர் அறிவிப்பு

பலஸ்தீனம் மீது அரச பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடும் இஸ்ரேலுடன் எமக்கு எந்த நட்புறவும்இல்லையெனஎதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாசதெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றகாலம்சென்றமுன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சேஹூ இஸ்ஸதீன், தயாரத்ன, காமினிலொக்குகே, இந்திரதாச ☞3

## போரை முடிவுக்கு கொண்டுவந்தோர் பழிவாங்கலுக்கு உள்ளாகின்றனராம்

### விமல் வீரவன்ஸவின் கண்டுபிடிப்பு இது

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகக் கூறி ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள், அரசியல் பழிவாங்கல்களைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. 30ஆண்டுகாலபயங்கரவாதபோரை முடிவுக்குக் கொண்டுவந்து நாட்டில் அமைதியை நிலைநாட்டிய முப்படையினர் மற்றும் அரசியல் தலைவர்கள் ஆளும்தரப்பால் பழிவாங்கலுக்கு உள்ளாவதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுர பிரியதர்ஷன யாப்பா, டிரான் அலஸ், விமல் வீரவன்ச, சானகவகும்பர, பிரேம்நாத்சிதொலவத்தே, நிமல் பியதிஸ்ஸ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர்சுஜீவசேமசிங்கஉள்ளிட்ட எதிர்க் கட்சியினர் பலர் நேற்று அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களுக்கு சென்று மகாநாயக்க தேரர்களை சந்தித்து அரசியல் கள நிலவரத்தைத் தெளிவுபடுத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார். அங்கு விமல் வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது: ☞3

## இனி இது .....

ஆளும்தரப்பு அதிகாரத்திற்கு வந்ததும் லஞ்சக் குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இலங்கையைச் சூறையாடி, அதனை வங்குரோத்து நிலைக்குக் கொண்டசென்றவர்களை எல்லாம் இந்தக் குற்றத்திற்காகக் கைது செய்வோம், வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள அந்தப் பணத்தையெல்லாம் மீட்டெடுத்து நாட்டுக்குக் கொண்டு வருவோம் என்றெல்லாம் ஆளும்தரப்பு அழித்த வாக்குறுதிகளை அது இதுவரையில் நிறைவேற்வில்லையாயினும் ஆங்காங்கே லஞ்சம் வாங்குபவர்கள் கைது செய்யப்படுகிறார்கள் என்பது சற்று நிம்மதி தரும் முன்னேற்றம் என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அதிலும் அரச அதிகாரிகள் லஞ்சம் வாங்குவதற்காகக்கைதுசெய்யப்படுகிறாக்ள், அதிலும் குறிப்பாக பொலிஸார் பலர் இதுவரையில் லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருக்கிறாா்கள். லஞ்சத்தில் ஊறித் திளைத்து, உருக்குலைந்து போய்க் கிடக்கும் பொலிஸ் துறையில் லஞ்சத்தை ஒழிப்பது கட்டாயத் தேவை. சட்டம் ஒழுங்கைக் காக்கும் முக்கிய துறையான பொலிஸ் ஒழுங்காக இல்லை என்றால் மக்களுக்கு ஒருபோது சட்டம் ஒழுங்கு மீது மதிப்போ மரியாதையோ வராது. எனவே பொலிஸார் மீதான லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்திருப்பது மிகவும் வரவேற்கப்படவேண்டியது.

இப்படி இலஞ்ச ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் மெல்ல மெல்ல தீவிரமடைந்திருப்பதை அடுத்து லஞ்சம் கேட்போரை மாட்டிவிடும் போக்கும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. லஞ்சம் தொடர்பில் பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. பாடிய வாயும் ஆடிய கால்களும் சும்மா இருக்காது என்பதுபோன்று லஞ்சம் வாங்கிய கைகளாலும் சும்மா இருக்க முடிவதில்லை, அதனால் பொலிஸாரும் அரச அதிகாரிகளும் சட்டப்படி அவர்கள் செய்து கொடுக்கவேண்டிய பணிகளுக்கே கைநீட்டுவதை இன்னும் நிறுத்தவில்லை. அதனால் அப்படி லஞ்சம் கேட்பவர்களை மாட்டிவிடும் போக்கு அதிகரித்துவிட்டது.

இப்போது பிரச்சினை என்னவென்றால் இப்படி லஞ்சம் கேட்போர் ரூபா ஆயிரம் கேட்டால் என்ன இரண்டாயிரம் கேட்டால் என்ன லஞ்ச ஊழல் ஒழிப்புத்துறைக்குத் தகவல் தந்து விடுகிறார்கள். முறைப்பாடு கிடைத்தால் லஞ்சம் கேட்டவர்களைக் கைதுசெய்யதுதான் ஆகவேண்டும். இந்த விடயத்தில் சுண்டக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்பதைப்போன்றுதான் நிலமை இருக்கின்றது என்கிறார் லஞ்ச ஊழல் ஆணைக்குழுத் தலைவர்.

ஆணைக்குழுவின் செயற்பாடுகள் அனைத்தும் கொழும்பிலிருந்தே மேற்கொள்ளப்படுகின்றன. லஞ்ச ஊழல் வழக்குகளும் கொழும்பிலேயே தாக்கல் செய்யப்படவேண்டியவனவாகஇருக்கின்றன. இந்த நடைமுறை காரணமாகத் தூர இடங்களிலிருந்து அதாவது யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பெரும் செலவு ஏற்படுகின்றது என்று குறைப்படுகிறார் லஞ்ச ஊழல் ஆணைக்குழு தலைவர். அதாவது 2 ஆயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றவரைப் பிடித்து வந்து வழக்குத் தொடர தமது துறைக்கு 20 ஆயிரம் ரூபாய் செலவு ஏற்படுகின்றது என்கிறார் அவர்.

இதனை அவர் சாதாரணமாகச் சொல்லவில்லை. நாடாளுமன்றத்தில் அரச பொது நிதிக் குழுவிடம் தெரிவித்தார். லஞ்ச ஒழிப்பு ஆணையத்தின் அதிகாரிகள் மற்றும் நிதி அமைச்சக அதிகாரிகள் அரச பொது நிதிக்கான நாடாளுமன்றக் குழுவிற்கு அழைக்கப்பட்டபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆணைக்குழுத் தலைவரான ரங்கா திசாநாயக்க மேலும் ஒரு விடயத்தையும் அங்கு சுட்டிக்காட்டினார். இதிலுள்ள மற்றொரு துன்பகரமான விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். லஞ்சத்தை ஒழிக்க வேண்டும் என்ற வேகத்தில் முறைப்பாடு செய்துவிடுபவர்கள், பின்னர் அந்த வழக்குகளில் சாட்டிசியமளிக்க கொழும்புக்கே வந்து செல்ல வேண்டியிருக்கிறது. அதற்கும் பெரும் செலவு ஏற்படுகின்றது என்பதுதான் அது.

அதாவது இரண்டாயிரும் ரூபாய் லஞ்சம் கேட்ட ஒருவரைமாட்டிவிட்ட யாழ்ப்பாணத்தவர், அந்த வழக்கில் சாட்சியமளிக்க கொழும்பு செல்வதற்காகக் குறைந்தது 10 ஆயிரம் ரூபாய் செலவிட வேண்டியிருக்கும். இதுகிணறுவெட்டப் பூதம் கிளம்பின கதை மாதிரி ஆகிவிடுகிறது. இந்த நிலைமை உடனியாக மாற்றப்படாவிட்டால் லஞ்சத்தை ஒழிப்பதில் பொதுமக்களிடம் காணப்படும் ஆர்வம் குன்றிவி-டக்கூடும். அதனால் மாவட்ட அளவில் ஆணையத்தின் அலுவலகங்கள் நிறுவப்படவேண்டும். அப்போதுதான் இலஞ்ச ஊழல் ஒழிப்பை முறையாக மேற்கொள்ள முடியும். இதற்கான முன்மொழிவை ஆணையத்தின் தலைவரும் முன்மொழிந்துள்ளார். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலுவலகம் தேவை என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஆணைக்குழு தொடர்பான சட்டங்களின் சிங்கள மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புகளுக்கு இடையே பெரிய வித்தியாசம் உள்ளதாகவும் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார். தான் ஆங்கிலத்தில் உள்ள சட்டத்தைப் படித்து அதன்படி நடந்தால் பதவியில் நீடிக்க முடியாது என்று தெரிவித்தார். அப்படிப் பார்த்தால் ஆணைக்குழுத் தலைவர் பதவியில் ஒருபோதும் தமிழர் ஒருவர் (சிங்களம் எழுத வாசிக்கத் தெரியாத ஒருவர்) ஒருபோதும் அமர்த்தப்படவே மாட்டார்கள் போலுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## எங்கிருந்தாலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கல்லையில் இருந்தாலும் மஹிந்த ராஜபக்சதான் என முன்னாள் அரசுத்தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மிகக் குறுகிய காலத்தில் மக்களால் நாளுக்கு நாள் வெறுக்கப்படும் ஒரு குழு, தங்கள் இயலாமையை மறைக்க ஊடகங்கள் முன் செய்த அந்த அறிக்கைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் எனக்கு இருக்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள அவர், மஹிந்த ராஜபக்சவாகிய நான் சட்டத்திற்கும் என் மக்களுக்கும் முன்னால் மட்டுமே தலை வணங்குவேன் என்றும், இன்று நாட்டில் அரச பயங்கரவாதம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியியேறியிருந்த அவர் நேற்றைய தினம் தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் செய்துள்ள பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது :

கடந்தபுதன்கிழமை(10)நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசுத் தலைவர்களின் உரிமைகளை நீக்கும் சட்டம் நடைமுறைக்கு வந்த்த மதித்து, எனக்கு சட்டப்பூர்வமாக வழங்கப்பட்ட விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வியாழன் (11) மாலை நான் வெளியேறினேன். இதற்கு முன்னர், விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுமாறு சிலர் ஊடகங்கள் முன்பல்வேறு உத்தரவுகளைப்பிறப்பித்ததை நான் கண்டேன்.

மக்களுக்கு எதையும் செய்ய இயலாமல் மிகக் குறுகிய காலத்தில் மக்களால் நாளுக்கு நாள் வெறுக்கப்படும் ஒரு குழு, தங்கள் இயலாமையை மறைக்க ஊடகங்கள் முன் செய்த அந்த அறிக்கைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் எனக்கு இருக்கவில்லை. ஆனால், அவர்கள் புதிய சட்டங்களை இயற்றிய பிறகு, 24 மணி நேரத்திற்குள் நான் விஜேராம இல்லத்திற்கு விடை கொடுத்தேன். ஏனென்றால் நாம் சட்டத்தை மதிக்கவேண்டும். மஹிந்த ராஜபக்சவாகிய நான் சட்டத்திற்கும் என் மக்களுக்கும் முன்னால் மட்டுமே தலை வணங்குவேன்.

தனிப்பட்ட பழிவாங்கலை நோக்கமாகக் கொண்ட, ஒழுக்கம் மற்றும் தொழில்முறை இல்லாத அரசியல் பயங்கரவாதத்தை நாம் அனைவரும் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. மேலும், கொடூரமான பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததன் காரணமாக, அதன் விளைவாக எழுந்த பல சம்பவங்களின் இலக்காக நான் மாறிவிட்டேன். ஆனால், பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவந்ததற்காக நான் ஒருபோதும் வருந்த மாட்டேன். இந்த தாய்நாட்டில் சுதந்திரமாக சுவாசிக்கும் உரிமைக்காக நான் போர் புரிந்தேன்.

சுவாசம் என்பது நம் அனைவருக்கும் பொதுவானது. இதில் இன, மத பேதங்கள் இல்லை. நம் சுவாசத்திற்காக தங்கள் சுவாசத்தை இழந்தவர்கள் இராணுவவீரர்கள். அவர்கள் வென்ற ஒரு பெருமைமிக்க தேசத்தின் சுதந்திரத்தை அடையாளப்படுத்தவும், அதற்கு நன்றி தெரிவிக்கவும், நாம் அனைவரும் சேர்ந்து அநுராதபுரம் புனித நகரத்தில் சந்த ஹிரு சேயவை (சந்திரன் மற்றும் சூரியன் தாதுகோபுரம்) உருவாக்கினோம். சந்திரன், சூரியன் இருக்கும் வரை நமது தாய்நாடு ஒரே நாடாக, ஒரே கொடியின் கீழ் இருக்கும் என்பதை அது குறிக்கிறது.

எனது மூத்த மகன் நாமல் கூறியது போலவே, எல்லாம் தொடங்கிய எனது கிராமத்திற்கு நான் திரும்ப வந்துள்ளேன். நாம் கட்டிய தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வழியாகவே நான் வந்தேன். இப்போது கிராமத்தில் புளிக்குழம்பில் உள்ள மீனை ருசித்து மகிழ என்னால் முடியும். கொழும்புக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. எது எப்படி இருந்தாலும், எல்லாம் இந்த மண்ணிலிருந்துதான் தொடங்கியது. 1970 பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ச என்ற இளைஞன் போட்டியிட்டான்.

அதற்கான வாய்ப்பை சிறிமாவோ பண்டாரநாயக்க வழங்கினார். ஒரு இளம் அமைச்சராக நான் பயணிக்க வேண்டிய பாதையை அவர் எனக்குக் காட்டினார். அவர் எங்களுக்கு ஒரு தலைவியாகவும், தாயாகவும் இருந்தார் என்றால் அது சரியானது. அரசியலில் சரியான வழிகாட்டுதல் மிகவும் முக்கியமானது.

நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களை சோசலிசத்தை நோக்கி வழிநடத்திய பண்டாரநாயக்கவுக்கு பின்னால், ரூஹுணுவின் மக்கள் பிரதிநிதியாக இருந்த எனது அன்புக்குரிய தந்தை எப்போதும் காணப்பட்டார். எனது தந்தை ரூஹுணுவின் பெலியத்த மக்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிநித்துவப்படுத்தினார். நாடாளுமன்றத்தின் இளைய உறுப்பினராக, 1970 ஆம் ஆண்டு மக்கள் ஆளும்தரப்புத்தின் முதல் சிம்மாசன உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் கொண்டு வந்தேன்.

அங்கு பெலியத்த மக்களின் எதிர்பார்ப்புகளைப் பற்றி நான் பேசியது எனக்கு நினைவிருக்கிறது. இருண்ட காலங்களில் நிலவிய அரசியல் அடக்குமுறை மற்றும் பழிவாங்கலை எதிர்த்து, காணாமல் போனவர்களுக்காக ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக்குச் சென்றதும் இந்த மஹிந்த ராஜபக்சதான்.

காணாமல்போனவர்கள், மனித உரிமைகள் மீறல்களுக்காக சட்ட உதவி வழங்கப்பட்ட இடத்தின் முகவரி 'வழக்கறிஞர் மஹிந்த ராஜபக்ச, தலைவர் - மனித உரிமைகள் மற்றும் சட்ட உதவி மையம், கார்ல்டன், தங்கல்லை' என்பதை எனது சகோதரர்களுக்கு மீண்டும் நினைவூட்டுகிறேன்.

பாதயாத்திரைகள், பொதுமக்கள் கண்டனப் போராட்டம், மனிதச் சங்கிலி போன்ற ஆளும்தரப்பு எதிர்ப்புப்போராட்டங்கள் மக்களின் நலனுக்காக ஜனநாயக வழிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் உண்மையான மக்கள் போராட்டங்களுக்கு எடுத்துக்காட்டுகள். தங்கள் அரசியல் அழுத்தங்களையும், பதற்றங்களையும் தவிர்ப்பதற்காக யாரும் ஜனநாயகத்திலிருந்து விலகிச்செல்லமுடியாது. தவறான தகவல்களைப் பரப்புவதன் மூலம் பிரதான எதிர்க்கட்சித் தலைவர்களை அடக்க முயற்சிப்பது வருத்தத்திற்குரியது.

மக்கள் எங்கள் மீது வைத்திருந்த எதிர்பார்ப்புகள் அதிகம். அந்த எதிர்பார்ப்புகளின் தீவிரம் காரணமாகவே கடந்த காலத்தில் சில சம்பவங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. மஹிந்த ராஜபக்சதன் மனசாட்சிக்கு இணங்க நாட்டிற்காக முடிவுகளை எடுத்தார். மக்களின் அன்பையும் பாசத்தையும்விட எனக்கு மதிப்புமிக்கது வேறு எதுவும் இல்லை. கடந்த காலத்தில் பெற்ற அதே மக்கள் அன்பை இன்றும் அதே போல் பெறுவது எனக்குக் கிடைத்த பாக்கியம். அந்தப் பாக்கியத்தை யாரிடமும் இழக்க முடியாது.

மதத் தலைவர்களிடமிருந்து தினமும் நான் பெறும் ஆசீர்வாதம், பௌதீக வரப்பிரசாதங்களைவிட மேலானது. எனது அன்பு மனைவி சிரந்தி, அரசியலில் ஈடுபடுவதற்குத்தேவையானமனசுதந்திரத்தை அளித்து எனக்கு எப்போதும் பலமாக இருந்தார். அப்போதும், இப்போதும் என் அருகில் இருந்த மற்றும் இருக்கும் எனது பிரதான பாதுகாப்பு அதிகாரி உட்பட எனது பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து கிடைக்கும் பாதுகாப்பு, பணியைத் தாண்டிய ஒரு பாசமான பிணைப்பாகும். மஹிந்த ராஜபக்ச விஜேராமவில் இருந்தாலும், தங்கல்லையில் இருந்தாலும் மஹிந்த ராஜபக்சதான்.

மஹிந்த ராஜபக்சவுக்கு இப்போது முட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளது என ஓர் அறிக்கை வெளியிடப்பட்டதாக எனக்குத் தெரியவந்தது. தனிப்பட்ட முறையில் என்னை இலக்கு வைப்பது குறித்து நான் பதிலளிக்கவில்லை. ஆனால் நான் வாழும் வரை, நாம் அனைவரும் வாழும் அல்லது ஒருநாள் அடக்கம் செய்யப்படும் சிங்கக் கொடியின் நிழலின் கீழ் உள்ள இந்த ஒற்றை தாய்நாட்டிற்கு யாரேனும் துரோகம் செய்தால், எந்தவொரு துன்புறுத்தல்களுக்கு மத்தியிலும் நான் எழுந்து நிற்பேன் என்று நான் அறிவிக்கிறேன்.

அன்று தேவைப்பட்டால் எனக்குத் தோள் கொடுக்க இந்த நாட்டில் மகா சங்கரத்தினத்தை உள்ளடக்கிய அன்பு மக்கள் இருக்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். கிருவப்பத்துவவில் உள்ள மஹிந்த ராஜபக்சவுக்கு அரசியல் அச்சுறுத்தல்களும், இடி முழக்கங்களும் நன்கு பழக்கப்பட்டவை என்றுள்ளது.

## எதிர்க் கட்சித்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தின் கோட்பாடுகள் மற்றும் மரபுகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பின்பற்ற வேண்டும் என்று ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற அமர்வின்போது 27/2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்வைத்த கேள்விகளைசுட்டிக்காட்டிஉரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிக்கட்சித்தலைவரால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கப் போதுமான கால அவகாசம்வேண்டும். உரிய நேரத்தில் பதிலளிக்கிறோம். நிலையியல் கட்டளை பற்றி விசேடமாக குறிப்பிட வேண்டும். நாடாளுமன்ற நிலையியல் கட்டளையில் 'பொதுக் காரணிகளில் முக்கியமான விடயங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்களோ குறித்த விடயத்தை விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு முன்னறிவித்ததன் பின்னர் அந்த கேள்விகளை கேட்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்கட்சித்தலைவரால் முன்வைக்கப்பட்ட கேள்விகளில் என்ன பொது காரணிகள் உள்ளன. ஆசிரியர் பற்றாக்குறை, தர்மாசிரியர் பரீட்சை மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகம், கம்பஹா விக்கிரமராராச்சி பல்கலைக்கழகம் பற்றி கேள்விகளை முன்வைத்துள்ளார். இந்த கேள்விகளுக்கு ஒரு அமைச்சின் ஊடாக மாத்திரம் பதிலளிக்க முடியாது.

எதிர்க்கட்சித்தலைவர் நிலையியற்கட்டளை 27/2 இன் கீழ் கேள்விகளை கேட்பதாயின் அரசுத்தலைவர் அநுரகுமாரதிஸாநாயக்கவை முன்மாதிரியாக கொள்ளவேண்டும். அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கடந்த நாடாளுமன்றத்தில் 27 / 2 .இன் கீழ் கேள்விகளை கேட்கும் போது ஒரு அமைச்சினை வரையறுத்து மாத்திரமே கேள்விகளை கேட்பார். அந்தக் கேள்விகள் அப்போதைய சூழ்நிலைக்குரிய பொது காரணியாக அமையும்.

நிலையியல் கட்டளை 27/2 அதிகாரத்தை எதிர்க்கட்சித் தலைவர் முறைகேடாக பயன்படுத்துகிறார். பல கேள்விகளை கேட்கும்போது அதற்கு எண்ணம் போல நேரத்தை பெற்றுக்கொள்கிறார். அதற்கு பிறிதொருதரப்பினர் எதிர்ப்பு தெரிவிக்கும்போது சபையில் அமைதியற்ற நிலை ஏற்படும். ஆகவே நாடாளுமன்றத்தின் கோட்பாடு மற்றும் மரபுகளை எதிர்க்கட்சித் தலைவர் பின்பற்ற வேண்டும் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இலஞ்ச, ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சகல சட்டங்களுக்கும் அப்பாற்பட்டு அரச நிதி தொடர்பான முழுமையான அதிகாரம் இந்த சட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தில் இருந்து இலங்கை மத்திய வங்கி விடுவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் சட்டத்தின் பிரகாரம் வரவு மற்றும் செலவு தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. இருப்பினும் தேசிய கணக்காய்வு திணைக்களம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுக்களின் பாதீடு நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்படுகிறது.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு, தேசிய கணக்காய்வாளர் திணைக்களத்தின் பாதீட்டை தயாரித்துக்கொள்ளும் சுயாதீனத்தை அந்நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவின் தலைவரின் சம்பளம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரின் சம்பளத்துக்கு இணையாகவே 2023 ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்டது. ஆனால் தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரின் தற்போதைய சம்பளத்துக்கு இணையாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவரின் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் என்றார்.

## மீனவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியுள்ளது.. கூட்டுத்தாபனத்தின் சேவையாளர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் முறையாகச் செலுத்தப்படவில்லை.

கூட்டுத்தாபனம் எதிர்கொண்டிருந்த கடன் மற்றும் நிதி நெருக்கடிகளை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இதற்கமைவாக கூட்டுத்தாபனம் கடந்த ஜூலை மாதம் 3 மில்லியன் ரூபா, ஓகஸ்ட் மாதம் 10 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் வருமானத்தை பெற்றுக்கொண்டுள்ளது.

நெருக்கடிகளுக்கு முறையாக தீர்வு காணப்பட்டுவரும் பின்னணியில்தான் கூட்டுத்தாபனத்தை மூடுவதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளதாக ஒரு தரப்பினர் போலியான செய்தியை பரப்பியுள்ளார்கள். கூட்டுத்தாபனத்தை மூடிவேண்டிய அவசியம் தற்போது கிடையாது. எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி சர்வதேச மீனவர் தினத்தை முன்னிட்டு மீனவர்களுக்கான ஒய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்றார்.

முன்னதாக, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை மூடுவதற்கு ஆளும்தரப்பு தயாராகி வருகிறதா என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினார்.

தற்போதைய ஆளும்தரப்பு மூடத்திட்டமிட்டுள்ள அரச நிறுவனங்களில் (முயற்சியாண்மைகளில்) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனமும் உள்ளடங்கியிருப்பதாக பல ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. முன்னதாக குறித்த அமைச்சின் அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை குறித்து கேள்வி எழுப்பப்பட்ட சந்தர்ப்பத்தில், இது தவறான செய்தி என்று சபாநாயகர் குறிப்பிட்டார்.

மூடப்படும் நிறுவனங்களின் பட்டியலில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் உள்ளடங்கவில்லை என்று சபாநாயகர் குறிப்பிட்டார். எனவே, அமைச்சு சார் ஆலோசனைக் குழு கூட்டத்தில் சபாநாயகர் அவ்வாறு கூறியது உண்மை தானா என்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் அவர் தெளிவுபடுத்தவேண்டும் என்றார்.

## ராஜபக்சக்களுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலப்பகுதிலேயே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய பிரதான சாட்சியான சாரா ஜஸ்மின் காணாமல் போயுள்ளார். அவர் சாய்ந்த மருது குண்டு தாக்குதலில் உயிரிழந்ததாக நிரூபிப்பதற்கு கோட்டாபய ராஜபக்ச ஆளும்தரப்பு பாரிய முயற்சிகளில் ஈடுபட்டது. எனினும் தற்போதைய ஆளும்தரப்பு சாரா ஜஸ்மின் உயிரிழிக்கவில்லை எனக் குறிப்பிடுகின்றது. எனவே இதில் சதித்திட்டம் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அவர் கண்டு பிடிக்கப்பட வேண்டும் என்பதையே நாமும் தொடர்ச்சியாக வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். இந்த தாக்குதல்களுடன் புலனாய்வுப்பிரிவிலுள்ள சிலரும் தொடர்புபட்டுள்ளதாக பாதுகாப்பு பிரதி அமைச்சரும் ஏற்றுக் கொண்டுள்ளார். அவ்வாறிருக்கையில் அவர் ஆளும்தரப்புத்தில் முக்கிய பதவிகளை வகிக்கும் போது எவ்வாறு சுயாதீன விசாரணைகளை முன்னெடுக்க முடியும்? அதன் காரணமாகவே நாம் அவருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பித்தோம்.

எனினும் அது சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டமா அதிபரின் ஆலோசனையை சபையில் சமர்ப்பிக்குமாறு நாம் கோரிய போதிலும், அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நம்பிக்கையில்லா பிரேரணையை ஏற்றுக் கொள்ள முடியும் என சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கியதாகவே எமக்கு தகவல்கள் கிடைத்தன. யாருக்கெதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை சமர்ப்பிக்க முடியும், யாருக்கு சமர்ப்பிக்க முடியாது என்று அரசியலமைப்பில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

அவ்வாறிருக்கையில் சபாநாயகர் அரசியல் ரீதியான தீர்மானத்தையே எடுத்திருக்கின்றார். இது குறித்த விவாதம் இடம்பெற்றால் அதனால் ஆளும்தரப்புத்துக்கு பாதிப்பு ஏற்படும் என்பதாலேயே சபாநாயகர் இவ்வாறான தீர்மானத்தை எடுத்துள்ளார். அரசியலமைப்பினை பாதுகாப்பதற்கு பதிலாக தனது கட்சியைப் பாதுகாக்கும் சபாநாயகராகவே இவர் காணப்படுகின்றார்.

கடந்த காலங்களில் ராஜபக்சர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் இந்த ஆளும்தரப்புத்தில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர். 2018ஆம் ஆண்டில் 52 நாட்கள் ஆளும்தரப்புத்தின் போது தான் தற்போதைய பாதுகாப்பு பிரதி அமைச்சர் கிழக்கு கட்டளை தளபதியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறான காரணிகள் வெளியே வரும் என்ற அச்சத்திலேயே விவாதத்தை நிறுத்துவதற்கு ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது என்றார்.

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெட்டியாரச்சி மற்றும் ரணதுங்க ஆகியோர் மீதான அனுபாப்பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சேஹூ இஸ்ஸதீன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளராகவும் கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவராகவும் இருந்ததுடன் 2001 முதல் 2010 வரை நாடாளுமன்றத்தில் அமைச்சராக பிரதி அமைச்சராக இருந்து அவர் சார்ந்த மக்களுக்கு பாரிய சேவை செய்து வந்திருக்கிறார்.

எப்போதும் தனது மக்களின் உரிமைகளை வெற்றிகொள்ள முயற்சித்து வந்தார். குறிப்பாக பலஸ்தீன் மக்களுக்காக குரல் கொடுத்து வந்தார். நாங்களும் பலஸ்தீன் பக்களின் உரிமைக்காக குரல்கொடுத்து வருகிறோம்..

பலஸ்தீன் மக்களின் உரிமையை பாதுகாக்க நாங்கள் முன்னிற்பது, அது நியாயமானது என்பதாலாகும். இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் இரண்டு நாடுகளாக சமாதானமாகச் செயற்படுவது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை மற்றும் வேலைத்திட்டமாகும்.

பலஸ்தீன் மக்கள் இன்று இஸ்ரேல் ஆளும்தரப்பின் அரச பயங்கரவாதத்துக்கு முகம்கொடுத்து வருகிறது. சிறு குழந்தைகள் முதல் தாய்மார்கள் பெண்கள் உள்ளிட்ட ஒட்டுமொத்த சிவில் பிரஜைகள் இன்று காசா பகுதியில் இனப்படுகொலைக்கு உள்ளாகி வருகிறார்கள்.

இந்த படுகொலையை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். இரண்டு நாடுகளும் அமைதியான முறையில் செயற்படவேண்டும். அது அவ்வாறு இடம்பெறும்வரை பலஸ்தீன மக்களின் உரிமை பாதுகாக்கப்படும் வரை மனித படுகொலை செய்கின்ற அரச பயங்கரவாத கலாசாரம் முடிவடையும் வரை மனித படுகொலை செய்கின்ற அரச பயங்கரவாத கலாசாரத்தை செயற்படுத்துகின்றவர்களுடன் எங்களுக்கு எந்தவித நட்புறவும் இல்லை.

இது ஐக்கிய மக்கள் சக்தியின் கொள்கை மற்றும் நிலைப்பாடாகும். எந்த அழுத்தங்களுக்கும் அந்த நிலைப்பாட்டை மாற்ற முடியாது. பலஸ்தீன மக்களை இலக்குவைத்து செயற்படுத்தும் பாரிய இனஅழிப்பு மனித படுகொலை செயற்பாட்டை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்றார்.

# அயலுறவுகள் விடயத்தில் இந்தியா ஒரு முன்மாதிரி

## பெருமைப்படுகிறார் அதன் தூதுவர்

பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் இடையிலான சமமற்ற கூட்டாண்மைகளுக்கு மத்தியில், இந்தியா தனது அயல் நாடுகளுடன் உறவுகளைக் கட்டமைப்பதில் ஒரு முன்மாதிரியாக உள்ளது. இந்தியா - இலங்கை தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், இந்தியா தனது பரந்த சந்தைகளை, இலங்கையிடம் இருந்து பெறுவதை விடவும் அதிகமான அணுகலை இலங்கைக்கு வழங்கியுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜா, இலங்கை-இந்தியா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் ஒரு வரவேற்பு நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வில் உரையாற்றிய போதே உயராணையர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட்டில் இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவு சங்க குழுவினர் , சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ தலைமையில் இந்தியாவிற்கு வெற்றிகரமாக மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின் பின்னணியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உயராணையர் தனது உரையில், இந்தியாவையும் இலங்கையையும் பிணைத்துள்ள ஆழமான, நாகரீகமான மற்றும் மக்கள் சார்ந்த உறவுகளை வலியுறுத்தினார். கடந்த ஏப்ரலில் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுப் பயணத்தை நினைவு கூர்ந்த அவர், இருதரப்பு உறவுகளில் இது ஒரு திருப்புமுனை எனக் குறிப்பிட்டுள்ளார். வலுசக்தி ஒத்துழைப்பு, பாதுகாப்பு, டிஜிட்டல் மாற்றம், திறன் மேம்பாடு, சுகாதாரம், ரயில்வே மற்றும் கிழக்கு மாகாணத்திற்கான பிரத்தியேக வளர்ச்சி உதவி உள்ளிட்ட இந்த சுற்றுப்பயணத்தின் குறிப்பிடத்தக்க பயன்களாகும் என அவர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

பெரிய நாடுகளுக்கும் சிறிய நாடுகளுக்கும் இடையிலான சமமற்ற கூட்டாண்மைகளுக்கு மத்தியில், இந்தியா தனது அயல் நாடுகளுடன் உறவுகளைக் கட்டமைப்பதில் ஒரு முன்மாதிரியாக உள்ளது என்பதை உயர் ஸ்தானிகர் எடுத்துரைத்தார். இந்தியா -இலங்கை தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், இந்தியா தனது பரந்த சந்தைகளை, இலங்கையிடம் இருந்து பெறுவதைவிடவும் அதிகமான அணுகலை இலங்கைக்கு வழங்கியுள்ளது. ஒரு வளரும் நாடாக இருந்தபோதிலும், 2022-இல் சவாலான காலகட்டங்களில் இந்தியா இலங்கைக்கு வழங்கிய கணிசமான மற்றும் நிபந்தனையற்ற உதவிகளையும் அவர் நினைவு கூர்ந்தார்.

இந்தியாவின் வலுவான பொருளாதார மறுமலர்ச்சியை வலியுறுத்திய உயர் ஸ்தானிகர், தற்போது இந்தியா உலகின் நான்காவது பெரிய பொருளாதார நாடாகவும், உலகளாவிய வளர்ச்சியின் முக்கிய உந்துசக்தியாகவும் உள்ளது என்றார். அமைதியைப் பேணுவதிலும், கடல்சார் பாதுகாப்பை உறுதிசெய்வதிலும், ஒருவிதிகள் அடிப்படையிலான பிராந்திய ஒழுங்கை மேம்படுத்துவதிலும் இந்தியாவும் இலங்கையும் இயற்கையான பங்காளிகள் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்ற நட்புறவு சங்கம் தொடர்ந்து ஒரு ஆற்றல்மிக்க தளமாக இருந்து, உரையாடலை வளர்த்து, பரஸ்பர நலன்களை மேம்படுத்தி, ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளை ஆராயும் என்று உயர் ஸ்தானிகர் நம்பிக்கை தெரிவித்தார்.

23 உறுப்பினர்கள் கொண்ட நட்புறவு சங்க குழுவினரை வழிநடத்திய இந்திய அரசுக்கு நன்றி தெரிவித்த சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜெயதிஸ்ஸ, டில்லியில் அக்குழுவினர் மேற்கொண்ட பல்வேறு சந்திப்புகள் குறித்து கருத்து வெளியிட்டார். பொது சுகாதாரம், மலிவான மருந்துகள், கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் புத்தாக்கம் பற்றிய நுண்ணறிவுமிக்க விவாதங்களும் அதில் அடங்கும். முன்னணி சுகாதார நிறுவனங்கள் மற்றும் வளர்ந்து வரும் ஸ்டார்ட்-அப்களுக்கும் குழுவினர் விஜயம் செய்திருந்தனர். இந்தியாவின் நாடாளுமன்ற நடைமுறைகள் மற்றும் சட்டமியற்றும் நடைமுறைகளைப்பற்றிய அனுபவம்மதிப்புமிக்க கற்றலை வழங்கியதாகவும், மேலும் இந்த விஜயம் இந்தியாவில் தற்போது நடந்து வரும் குறிப்பிடத்தக்க பொருளாதார மாற்றத்தை நேரடியாக அனுபவிக்க ஒரு வாய்ப்பை வழங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் இலங்கை-இந்தியா நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் பல உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வு, பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்கள், பரஸ்பர மரியாதை மற்றும் பிராந்திய அமைதி மற்றும் செழிப்புக்கான ஒரு பொதுவான பார்வை ஆகியவற்றின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான உறவுகளை மீண்டும் உறுதிப்படுத்தியதாக கொழும்பிலுள்ள இந்திய உயராணையரகம் தெரிவித்துள்ளது.

## போரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் கடற்படை தளபதி நிஷாந்த உலுகேதன்ன அடிப்படையற்ற காரணிகளைக் கூறி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். நாட்டில் அமைதியை நிலைநிறுத்திய படைத்தளபதிகள் இவ்வாறு அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்பில் மகா சங்கத்தினருக்கு தெளிவுபடுத்துவதற்காகவே நாம் இங்கு வருகை தந்தோம். அது தொடர்பில் பேசுபவர்களை ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கும் ஆளும்தரப்பு முயற்சிக்கின்றமை தொடர்பிலும் மகா சங்கத்தினருக்கு தெளிவுபடுத்தியுள்ளோம்.

ஆளும்தரப்பு அபிவிருத்திகளையோ சமூக மேம்பாட்டையோ செய்யவில்லை. 5 சதவீதமாகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி வேகம் 3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. கடன்சுமை முன்னரைவிட தற்போது அதிகரித்துள்ளது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகக் கூறி ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள், அரசியல் பழிவாங்கல்களைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. எவ்வாறிருப்பினும் இவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

நிஷாந்த உலுகேதென்ன தொடர்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றில் முன்னாள் அமைச்சர் உதயகம்மன்பில குறிப்பிட்டிருந்தார். அதில் அவர் 'புலி' என்ற வார்த்தையை உபயோகித்தமைக்காகவே ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் அவரை கைது செய்ய முயற்சிக்கின்றனர். விடுதலைப் புலிகள் இயக்கம் என்பது நாட்டில் தடை செய்யப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பாகும்.

மாறாக அது தமிழ் சமூகத்தையோ அல்லது முஸ்லிம் சமூகத்தையோ விமர்சிக்கும் சொற்பிரயோகம் அல்ல. இவ்வாறு அடிப்படையற்ற காரணிகளைக் கொண்டு முன்னாள் அரசியல்வாதிகளைக் கைதுசெய்ய முயற்சிப்பதை அரசியல் பழிவாங்கல் அன்றி எவ்வாறு கருதுவது?

இதற்கு முன்னர் எந்தவொரு ஆளும்தரப்பும் இவ்வாறு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடவில்லை. பகிரங்கமாக கூற முடியாத பல பழிவாங்கல்களில் ஆளும்தரப்பு ஈடுபட்டுள்ளது. நாட்டில் அரசுத் தலைவர் என்பவர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தீர்மானம் எடுப்பவராவார்.

எனவே அவர் ஓய்வுபெற்ற பின்னர் அவரது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியதும், ஏனைய சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டியதும் அத்தியாவசியமானதாகும். இலங்கையில் மாத்திரமின்றி எந்தவொரு நாட்டிலும் இதுவே யதார்த்தமாகும்.

தற்போது முன்னாள் அரசுத் தலைவர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து வெளியேறியுள்ளனர். அவ்வாறெனில் இனி ஆளும்தரப்பு மக்களின் வாழ்க்கை செலவை குறைத்துக் காட்ட வேண்டும். இதன் மூலம் எவ்வாறு பணத்தை மீதப்படுத்துகின்றனர் என்பதையும் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## முன்னாள் தலைவர்களின் சலுகைகள் சுமையா? உரிமையா?

இலங்கை அரசியல் வாழ்வில் சமீபகாலத்தில் பெரும் விவாதத்திற்குரியதாக மாறியுள்ள விடயம், முன்னாள் அரசுத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகள் நீக்கப்பட்ட விவகாரம் ஆகும். தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு இவ்விடயத்தை சட்டப்படி நிறைவேற்றியிருக்கிறது. இதனைப் பொறுத்தவரை, பொதுமக்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில் இது நியாயமான நடவடிக்கையாகக் கருதலாம். ஆனால் எதிர்க்கட்சிகளில் சிலர் இதனை அரசியல் பழிவாங்கல் என விளக்கி மக்களைத் தூண்ட முயல்வதும் உண்மை.

முன்னாள்தலைவர்களுக்குவழங்கப்படும்சலுகைகள்என்பது உலகின் பல நாடுகளிலும் வழக்கமாக உள்ள நடைமுறையே. அமெரிக்காவில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வாழ்நாள் ஓய்வூதியம், அலுவலகச் செலவுகள், பாதுகாப்பு வசதிகள் போன்றவை சட்டத்தால் வழங்கப்படுகின்றன. இங்கிலாந்திலும் முன்னாள் பிரதமர்களுக்குப் பொது கடமைகளைச் செய்ய உதவும் நிதி உதவி உண்டு. இவை அனைத்தும் அந்தந்த தலைவர்கள் பதவி விலகிய பின்னரும் சில சமூக மற்றும் தேசிய கடமைகளில் ஈடுபடுவதற்காகவே ஏற்படுத்தப்பட்டவை.

ஆனால் இலங்கையின் சூழ்நிலை மாறுபட்டது. கடந்த பல தசாப்தங்களாக அரசின் தவறான மேலாண்மை, ஊழல் மற்றும் வீண் செலவினங்களால் நாட்டின் பொருளாதாரம் சிதைந்து போயுள்ளது. முன்னாள் ஆட்சியாளர்கள் பலர் இக்கட்டான சூழ்நிலைக்குப் பொறுப்பாளர்களாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றனர். இந்நிலையில் மக்களிடையே உருவான கோரிக்கை – “முன்னாள் தலைவர்களுக்கு வழங்கப்படும் அநியாயச் சலுகைகள் நீக்கப்படவேண்டும்” என்பதாகும். அந்தக் கோரிக்கையைக் கருத்தில் கொண்டு ஆளும்தரப்பு எடுத்துள்ள முடிவு சரியானதுதான்.

ஆனால் இதனைச் செய்வதற்கான நடைமுறை வெளிப்படையாகவும்சட்டரீதியாகவும்இருக்கவேண்டும். சட்டத்தின் வழி விசாரணைகள் நடத்தி, முறையான கணக்கீடுகள் மூலம் அரசுக்கு ஏற்பட்ட இழப்புகளை மீட்டெடுக்க வேண்டியதுதான் உண்மையான தீர்வு. வெறும் சலுகைகள் நீக்கப்பட்டதாலேயே மக்கள் விரும்பிய நீதி நிகழ்ந்துவிட்டது என்று கருத முடியாது. தவறான முறையில் வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சொத்துக்களை மீட்டு அரசுக்குச் சேர்ப்பதே ஆளும்தரப்பின் முதன்மையான கடமை.

ஆனாலும் முன்னாள் அரசுத் தலைவரிகளின் சலுகைகள் நீக்கப்பட்டதன் அடிப்படையில் சிங்களப் பகுதிகளில் அரசியல் கொதிநிலையை தூண்ட முனைவோர் உள்ளனர். இது மிகவும் ஆபத்தான நடைமுறை. இவ்விடயம் நாட்டின் இன, மத, மொழி சார்ந்த பாகுபாட்டுடன் தொடர்புடையதல்ல. மாறாக, இது நிதி ஒழுங்கு, பொதுச் செலவுகள் மற்றும் நல்லாட்சியைப் பற்றியதே. அதை அரசியல் பழிவாங்கலாக சித்தரித்து மக்களைப் பிரிக்க முயல்வது மக்களாட்சிக்குத் தீங்கு விளைவிக்கும்.

வளர்ந்தநாடுகளின்உதாரணங்களைஎடுத்துக்கொண்டாலும், அவற்றின் முன்னாள் தலைவர்கள் சலுகைகளைப் பெற்றுக்கொண்டாலும், அவ்வாறான நாடுகளில் கண்காணிப்பும் பொறுப்புக்கூறலும் கடுமையாக உள்ளது. சட்டத்தை மீறியோ, ஊழலில் சிக்கியோ இருப்பவர்களுக்கு அவ்வாறான உரிமைகள் தானாகவே கட்டுப்படுத்தப்படுகின்றன. இலங்கையிலும் அத்தகைய சட்டக் கட்டுப்பாடுகள் உறுதி செய்யப்படவேண்டியது அவசியம்.

முன்னாள் தலைவர்களின் சலுகைகள் நீக்கப்பட்டிருப்பது ஒரு தொடக்கம் மட்டுமே. ஆனால் அது இறுதி இலக்கு அல்ல. நாட்டின் பொருளாதாரத்தையும் சமூக நீதியையும் காக்க, தவறாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் திரும்பப் பெறப்படவேண்டும். அதற்காக சட்ட வழிகள், பன்னாட்டு ஒத்துழைப்புகள், நியாயமான விசாரணைகள் அனைத்தும் பின்பற்றப்படவேண்டும். ஆளும்தரப்பு இதனை அரசியல் விளம்பரம் ஆக்காமல், உண்மையான நீதியின் பாதையில் முன்னெடுத்துச் சென்றால் மட்டுமே மக்கள் நம்பிக்கையைப் பெற முடியும்.

இது அரசியல் பழிவாங்கலா, இல்லை பொதுநலனுக்கான சட்ட நடவடிக்கையா என்பதைக் காட்டுவது, அடுத்தடுத்த ஆட்சிச் செயற்பாடுகளே. அந்தச் செயற்பாடுகள் நீதியை முன்வைக்கும் வகையிலானவையாக இருக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

# மத்தி– உள்ளாட்சி நிறுவனங்கள் இடையே அபிவிருத்தியில் ஒருங்கிணைப்புவேண்டும்

## அரசுத் தலைவர் அழுத்தம்

அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் சிறந்த ஒருங்கிணைப்புடன் இணைந்து செயல்பட வேண்டும் என்று அரசுத் தலைவர் அநுரகுமார வலியுறுத்தினார்.

தமதுஅதிகாரத்தைத்தக்கவைத்துக்கொள்வதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களை பயன்படுத்தும் பண்பாடு தற்போதைய ஆளும்தரப்புத்தின் கீழ் முடிவுக்கு வந்துள்ளது என்று அரசுத் தலைவர் தெரிவித்தார். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய திட்டத்தை நோக்கிச் செல்வதற்குப் பதிலாக மத்திய அரசு மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் இணைந்துசெயல்படவேண்டியதன்அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காகவும் 2025 ஆம் ஆண்டில் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் அடிப்படையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை மீளாய்வு செய்வதற்காகவும் நேற்றுமுன்தினம் அரசுத் தலைவர் செயலகத்தில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட போதே அரசுத் தலைவர் அநுரகுமார இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

கல்வி, சுகாதாரம் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்ற துறைகளுடன் தொடர்புடைய அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்துவதில் மத்திய அரசுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள சிக்கலான சூழ்நிலைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன், அது தொடர்பான தீர்வுகள் மற்றும் முன்மொழிவுகளும் இங்கு ஆராயப்பட்டன.

வெளிநாட்டு கடன்கள் மற்றும் உதவிகளின் கீழ் நாட்டிற்குகிடைக்கும்திட்டங்களைசெயல்படுத்துவதில் விசேட திட்ட அலுவலகங்களை நிறுவி அதற்காக பாரிய நிர்வாக செலவுகளை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, தற்போதுள்ள நிர்வாகக் கட்டமைப்பிற்குள் செயல்பட்டு, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிறைவு செய்து, மக்களுக்கு அதன் நன்மைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாகாண ஆளுநர்கள் மற்றும் பிரதம செயலாளர்களுக்கு அரசுத் தலைவர் அறிவுறுத்தினார்.

பாடசாலைகட்டமைப்பைநெறிப்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. வலய மட்டத்தில் ஒவ்வொரு பாடசாலைக்கும் சென்று அவற்றை நெருக்கமாக ஆராய்ந்து , அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்குவதற்கான சிறந்த தீர்வை முன்வைக்குமாறு அரசுத் தலைவர் அநுரகுமார திசாநாயக்கஅதிகாரிகளுக்குமேலும்அறிவுறுத்தினார்.

மாகாண ஆளுநர்கள், அரசுத் தலைவர்யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோக பண்டார, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, அரசுத் தலைவர்யின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர்கள் ரஸல் அபோன்சு, கபில ஜனக பண்டார, அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண செயலாளர்கள் மற்றும் நிதி அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர்.

# இந்திய உயராணையருடன் செல்வம் எம்.பி. சந்திப்பு

இந்திய உயராணையர் சந்தோஸ் ஜாவைச் சந்தித்து ரெலோ அமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பேச்சு நடத்தினார். நேற்று 11-9-2025 வியாழக்கிழமை, கொழும்பில் உள்ள இந்திய உயர் உயராணையரகத்தில் மதியம் 2.00 மணிக்கு இச்சந்திப்பு நடைபெற்றது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலொவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனும், அக்கட்சியின் நிதிச் செயலாளரும் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரனும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அதன்போது செப்டம்பர் 8 தொடங்கிய ஐநா மனித உரிமை 60 ஆவது கூட்டத்தொடரில், இலங்கை தமிழர்களின் அபிலாசைகளான அர்த்தமுள்ள அதிகார பகிர்வு, நீதி, கௌரவம் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை தாம் வரவேற்பதாக ரெலோ தலைவர் தெரிவித்தார்.

அரசியல் யாப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தும் வகையிலே விரைந்து மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியமை நீண்ட காலமாக இழுத்தடிக்கப்படும் மாகாண சபை தேர்தலை நடாத்த வழிவகுக்கும் எனவும் உயராணையரிடம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மன்னார் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு 600 மில்லியன் ரூபாய்களளை வழங்கி அப்பிரதேச மக்களின் நீண்ட கால சுகாதாரத் தேவையை நிறைவு செய்ய இந்தியா முன்வந்தமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலையவிஸ்தரிப்பு மற்றும் தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து என்பவற்றில் இந்தியா தொடர்ந்தும் அக்கறையுடன் இருப்பதாகவும் விரைந்து அதை நிறைவேறுவதற்கான தொடர்முயற்சிகள்எடுக்கப்படுதாகவும் இந்திய உயராணையர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதும் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதும் சமாந்தரமாக செயல்படுத்தப்படுவது அவசியம் எனவும் அதில் இந்தியா அக்கறையோடு இருப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றில் இந்தியா இதய சுத்தியோடும் உறுதியோடும் பயணிப்பதற்கு தமிழ் மக்கள் சார்பில் தாம் நன்றி கூறுவதாக ரெலோ தரப்பில தெரிவிக்கப்பட்டது. மிகவும் ஆக்கபூர்வமானஇச்சந்திப்புகிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடைபெற்றது.

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வர்த்தகத் தம்பதியினர் நேற்று கைது

## அலைபேசிகள், சிகரெட்டுகள் பறிமுதல்

கட்டுநாயக்க விமான நிலையத்தில் 135 அலைபேசிகள், வெளிநாட்டு உயர் ரக சிகரெட்டுக்கள் உள்ளிட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுடன் நாட்டிற்கு வருகைதந்த வர்த்தகத் தம்பதியினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலையத்தின் பயணிகள் வெளியேறும் முனையத்துக்கருகில் நேற்று வெள்ளிக்கிழமை சந்தேகநபர்களை தடுத்து நிறுத்திய சுங்கப் பிரிவு அதிகாரிகள் குறித்த இருவரையும் சோதனையிட்டுள்ளனர். இதன்போது பயணிகள் கொண்டுவந்திருந்த பயணப்பொதிகளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் நவீன அலைபேசிகள் உள்ளிட்ட பல பெறுமதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

இந்நிலையில் சந்தேகநபர்களை கைது செய்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்த நிலையில், அவர்கள் கொழும்பைச் சேர்ந்த வர்த்தகத் தம்பதியினர் என தெரியவந்துள்ளது. 32 வயதுடைய நபர் ஒருவரும் 45 வயதுடைய பெண் ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் டுபாய் நகரிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமான சேவைக்கு சொந்தமான யு.எல் 266 என்ற விமானத்தின் மூலம் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

சந்தேகநபர்களின் 5 பயணப்பொதிகளினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 132 கையடக்கத் தொலைபேசிகள், 14 டெப் கணினிகள், சிகரெட் மற்றும் கஞ்சாபாவனைக்குப் பயன்படுத்தும் கடதாசி மற்றும் பெருமளவான அழகுசாதனப் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது. இதேவேளை கைதான சந்தேகநபர்கள் தொடர்பில் விமான நிலைய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# வரவு செலவுத் திட்டம் நவம்பரில்

2026ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டை (வரவு செலவுத்திட்ட உரை) 2025 நவம்பர் 07 நடத்துவதற்கும், அதனைத் தொடர்ந்து நவம்பர் 08 முதல் டிசம்பர் 05 வரை விவாதத்தை நடத்துவதற்கும் நடைபெற்ற நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டம் நேற்று முன்தினம் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இதற்கமைய ஒதுக்கீட்டுச் சட்டமூலம் முதலாவது மதிப்பீட்டுக்காக செப்டெம்பர் 26ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரசுத் தலைவர்யால் 2025 நவம்பர் 7 ஒதுக்கீட்டுச் சட்டமூலம் இரண்டாவது மதிப்பீட்டுக்காக (வரவு செலவுத்திட்ட உரை) நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். அதனைத் தொடர்ந்து நவம்பர் 8ஆம் திகதி முதல் நவம்பர் 14 வரை 6 நாட்கள் இரண்டாவது மதிப்பீடு விவாதத்தை நடத்துவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. இதற்கு அமைய நவம்பர் 14 பி.ப 6மணிக்கு இரண்டாவது மதிப்பீடுக்கான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதன் பின்னர் நவம்பர் 15 முதல் டிசம்பர் 5ஆம் திகதி வரை 17 நாட்கள் குழுநிலை விவாதத்தை நடத்துவதற்கும், டிசம்பர் 5 பி.ப 6 மணிக்கு மூன்றாவது மதிப்பீடுக்கான வாக்கெடுப்பை நடத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இந்தக் காலப்பகுதியில் ஆளும்தரப்பு விடுமுறைகள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர சனிக்கிழமை உள்ளிட்ட ஏனைய அனைத்து நாட்களிலும் வரவு செலவுத்திட்ட விவாதம் இடம்பெறும். குழுநிலை விவாதம் நடைபெறும் காலப்பகுதியில் திங்கட்கிழமைகளில் மு.ப 9.30 மணிக்கும், ஏனைய நாட்களில் மு.ப 9 மணிக்கும் நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு அமைய இக்காலப் பகுதியில் நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு மேலதிகமாக வாய்மூல விடைக்கான ஐந்து கேள்விகள் மற்றும் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழான கேள்வி ஒன்றுக்காகவும் நேரத்தை ஒதுக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்காலப் பகுதியில் பி.ப 6.00 மணிவரையும் வரவு செலவுத்திட்ட விவாதத்தை நடத்துவதற்கும், வாக்கெடுப்பு நடத்தப்படும் தினங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் பி.ப 6 மணி முதல் 6.30 மணிவரையான காலப்பகுதியை ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிக்கு 50:50 என்ற அடிப்படையில் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணைகளுக்காக ஒதுக்குவதற்கும் இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# அரச வங்கி ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

அரச வங்கிகளின் தனியார்மய மாக்கல் திட்டம் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்னிறுத்தி அரச வங்கி ஊழியர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் உள்ள அரச வங்கிகளை தனியார்மயமாக்கும்ஆளும்தரப்புத்தின் திட்டத்திற்கு தமது கடுமையான எதிர்ப்பு தெரிவித்தும், வங்கி ஊழியர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்குமாறு கோரியும் அரச வங்கி ஊழியர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர். அரச வங்கி கூட்டு தொழிற்சங்க கூட்டணி இந்த போராட்டத்தை ஒழுங்கமைத்திருந்ததுடன், நேற்று காலை லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய ஆராட்டக்கர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதுதொடர்பில் அரசவங்கி ஊழியர் சங்கத் தலைவர் சன்ன திஸாநாயக்க தெரிவித்ததாவது:

நாட்டில் உள்ள சுமார் 6 அரச வங்கிகளை சேர்ந்த வங்கி ஊழியர்கள் இன்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தனியார் வங்கிகளின் தலையீட்டினால் அரச வங்கி கட்ட டைப்பில்பாரியசிக்கல்கள்எழுந்துள்ளன. அரச வங்கிகளின் நிர்வாகம் ஆளும்தரப்புத்தை சார்ந்துள்ளது. வங்கிஊழியர்களின்பிரச்சினைகளுக்கு தீர்வை வழங்குமாறு நிதி அமைச்சிடம் பல முறை கோரிக்கை விடுத்துள்ள போதும் அவற்றை உரிய அதிகாரிகள் கருத்தில் கொள்ளவில்லை.

இது தொடர்பில் நிதியமைச்சிடம் கலந்துரையாடநாம்முயற்சித்தபோதும் அது பலனளிக்கவில்லை. கடந்த ஆளும்தரப்புத்தை போலவே, தற்போது அரச வங்கிகளை தனியார் மயமாக்க ஆளும்தரப்புத்தினர்முயற்சிக்கின்றனர். அண்மையில் இதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைத்திருந்தது. இதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு அரச வங்கிகளின் பங்குகளை தனியார் வங்களிடம் ஒப்படைப்பாளர்களாயின் எமது தொழிற்சங்க நடவடிக்கையையும் தீவிரப்படுத்த தயாராக உள்ளோம் என்றார்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் அப்பகுதியில் இருந்து முன்னேறிச் செல்வதை தடுப்பதற்காக நீர்தாரை பீச்சு வாகனங்கள் தார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. அத்தோடு நிலைமையை கருத்தில் கொண்டு பெருமளவான பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டிருந்ததுடன், கலகத் தடுப்பு பிரிவினரும்வரவழைக்கப்பட்டிருந்தனர். சேர். சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையிலிருந்து லோட்டஸ் வீதி வழியாக அரசுத் தலைவர் செயலகம் நோக்கி பயணித்த ஆர்ப்பாட்டக்கார்கள், அரசுத் தலைவர் செயலகத்தில் கடிதம் ஒன்றையும் கையளித்திருந்தனர்.

# தாய், மகன் குத்திக் கொலை கரந்தெனியவில் கொடூரம்

கரந்தெனிய பகுதியில் தாய் ஒருவரும் அவரது மகனும் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடும் நபரால் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொடவெல பகுதியில் உள்ள வீடொன்றினுள்வியாழக்கிழமை பிற்பகல் தாயும் அவரது மகனும் கூறிய ஆயுதத்தால் தாக்கி படுகொலை செய்யப்பட்ட நிலையில் மீட்கப்பட்டனர்.

75 வயதுடைய தாய் ஒருவரும் அவரது 25 வயதுடைய மகனும் இவ்வாறு கொலை செய்யப்பட்டனர் என்று தெரியவந்துள்ளது. அருகில் இருந்தவர்கள் பொலிஸாருக்கு அளித்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் சடலங்களை மீட்டு விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

வீட்டினுள் அத்துமீறிநுழைந்த நபர் ஒருவர் இருவரையும் தாக்கிய பின்னர் அங்கிருந்துதப்பிச் சென்றுள்ளார். சம்பவத்தின்போது உயிரிழந்த பெண்ணின் அலறல் சத்தத்தை கேட்டு பிரதேசவாசிகள் அப்பகுதிக்குச் சென்றுள்ளதுடன், அதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் அப்பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனையில் ஈடுபடும் நபர் ஒருவர் கையில் கூரிய ஆயுதத்துடன் குறித்த வீட்டை நோக்கிச் சென்றதையும் அருகில் இருந்தோர் அவதானித்துள்ளனர்.

சந்தேகநபர் வியாழக்கிழமை மதுபோதையில் மனைவியின் சகோதரியின் வீட்டிற்குச் சென்று தகராறில் ஈடுபட்டுள்ளதுடன், சந்தேகநபரிடமிருந்த ஆயுதத்தைக் கண்டு அவர்கள் அச்சமடைந்து வீடினுள் மறைந்துக்கொண்டனர் என்று விசாரணைகளின்போது தெரிவித்துள்ளனர்.

மேலும் உயிரிழந்த இருவரும் தனது சட்டவிரோத மதுபான விற்பனைக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படுவதாக சந்தேகநபர் பல முறை தெரிவித்துள்ளார் என்று பிரதேசவாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்தோடு சந்தேகநபர் மூர்க்கத்தனமானவர் என்றும் இதனால் அப்பகுதி மக்கள் முறைப்பாடளிக்க அச்சப்படுகின்றன் என்றும் விசாரணை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பான விசாரணை தெற்கு குற்றப்பிரிவுக்கு பொறுப்பான சிரேஷ்ட பதில் பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலதின் ஆலோசனைக்கமைய கரந்தெனிய பொலிஸ் குற்ற பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம். கே லியனகுலவினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## முதலீட்டாளர்களுக்குத் தேவையான

# உட்கட்டமைப்பு வசதி மேம்பாட்டில் தயக்கமின்றி ஆளும்தரப்பு முதலிடும்

## அரசுத் தலைவர் அறிவிப்பு

நாட்டில்தற்போது நிலவும் பொருளாதார உறுதித்தன்மையின் அடிப்படையில் எதிர்கால பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதே ஆளும்தரப்புத்தின் நோக்கம் என்றும் கைத்தொழிற்துறையினர் மற்றும் முதலீட்டாளர்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் முதலீடு செய்ய ஆளும்தரப்பு தயக்கமின்றி செயற்படும் என்று அரசுத்தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

அரசுத் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற ஆடைத் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களுடன் 2026 வரவுசெலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் பங்கேற்றபோது அரசுத் தலைவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள கைத்தொழில்களுக்கு வசதிகளை வழங்குவதன் மூலம் முதல் சுற்றில் எதிர்பார்க்கும் முன்னேற்ற இலக்குகளை அடைய ஒரு அணுகுமுறையொன்றை எட்ட முடியும் என்று அரசுத் தலைவர் சுட்டிக்காட்டினார். ஒவ்வொரு ரூபாயையும் அதிக பலன் கிடைக்கும் முதலீடுகளுக்குப் பயன்படுத்துவது ஆளும்தரப்புத்தின் கொள்கை என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளிட்ட ஆடைத்துறையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் பிரதிநிதிகளினால் ஒவ்வொரு துறை சார்ந்த வரவு செலவுத் திட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

உற்பத்திச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட ஆடைத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து ஆடைத்துறையினர் அரசுத் தலைவர்யிடம் எடுத்துரைத்தனர். அனைத்துத் துறைகளுக்கும் வரிச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை ஆளும்தரப்பு அங்கீகரிப்பதாகவும், வருமான நிலைகளுக்கு அமைவாக நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாத்து எதிர்காலத்தில் அத்தகைய சலுகைகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் அரசுத் தலைவர் தெரிவித்தார்.

'பரஸ்பர வரி' முறையின் கீழ் அமெரிக்காவினால் இலங்கை மீது விதிக்கப்பட்ட தீர்வை வரி விகிதத்தைக் குறைக்க ஆளும்தரப்பு தலையிட்டதை கைத்தொழில்துறையினர் பாராட்டினர். இதற்காக அரசுத் தலைவர்க்கு நன்றி தெரிவித்ததோடு எதிர்காலத்தில் இது தொடர்பாக மேலும் சலுகைகளைப் பெற தலையிடுமாறு கோரினர்.

ஆடைத் துறையில் பணியாற்றுகையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும், உலக சந்தையில் இலங்கை தற்போது காணப்படும் புதிய வாய்ப்புகளை திறம்படப் பயன்படுத்துவதற்கும் சவால்களை எதிர்கொள்வதற்கும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. இந்த விடயங்கள் குறித்து எதிர்வரும் வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயங்களின் போது கவனம் செலுத்துமாறும் கலந்துரையாடலில் பங்கேற்ற பிரதிநிதிகள் அரசுத் தலைவர்யிடம் கோரிக்கை விடுத்தனர்.

ஆளும்தரப்பு ஏற்கெனவே கவனம் செலுத்தியுள்ள . சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கான அபிவிருத்தி வங்கியொன்றின் அவசியம் குறித்து கலந்து கொண்ட பிரதிநிதிகள் அரசுத் தலைவர்யின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அரசுத் தலைவர் குறிப்பிட்டது போல், ஒன்லைன் முறைமை மற்றும் எளிமைப்படுத்தப்பட்ட வரி, நிலையான வரி வரை மேம்படுத்துவது ஆளும்தரப்புத்தின் டிஜிட்டல் மயமாக்கல் அணுகுமுறை என்பவற்றுக்கு கைத்தொழிற்துறையினர் இதன் போது நன்றி தெரிவித்தனர். இலத்திரனியல் விலைபட்டியல் உள்ளிட்ட வரி அறவிடல் வசதிகளை மேலும் மேம்படுத்தவும் அவர்கள் பரிந்துரைத்தனர்.

தற்பொழுது உற்பத்திகளில் 55சதவீதம் பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகள் என்றும், எதிர்காலத்தில் இதனை மேலும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாக கைத்தொழிற்துறையினர் தெரிவித்ததோடு ஆளும்தரப்பு இதற்குத் தேவையான வசதிகளை உருவாக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்தத்துறையில் நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் நாட்டின் வளர்ச்சிக்காக முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு நன்றி தெரிவித்த அரசுத் தலைவர், அந்த முன்மொழிவுகள் அனைத்தையும் ஆராய்ந்து , ஆளும்தரப்பு எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் மற்றும் இது தொடர்பாக நடத்தப்படும் எதிர்கால கலந்துரையாடல்களுக்கான திட்டத்தைத் தயாரிக்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அரசுத்தலைவர்யின் சிரேஸ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, அரசுத் தலைவர்யின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர்களான ரஸல் அபோன்சு, கபில ஜனகபண்டார, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தலைவர் மங்கள விஜேசிங்க மற்றும்

# கம்மன்பிலவைக் கைதுசெய்ய இப்போதைக்கு முடிவு இல்லை

## சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவை கைது செய்ய தற்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குத் தெரிவித்தது. குற்றப் புலனயவுத் திணைக்களம் சார்பில் மன்றில் ஆஜரான சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரால் சுதர்ஷன டி சில்வா இதனை நீதிமன்றுக்கு அறிவித்தார்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச இணக்கப்பட்டு சட்டத்தின் கீழ் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தன்னைக் கைது செய்யத் தயாராக இருப்பதாகவும், தன்னைக் கைது செய்வதைத் தடுத்து உத்தரவு பிறப்பிக்க கோரியும் உதய கம்மன்பில தாக்கல் செய்த ரிட் மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பாக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வா, மனுதாரர் உதய கம்மன்பிலவை கைது செய்வது குறித்து பொலிஸார் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை என்று நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

அத்துடன் உதய கம்மன்பில தொடர்பில் விசாரணை தொடர்ந்தும் நடைபெற்று வருவதாகவும், அதன் பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி ரொஹந்த அபேசூரிய மற்றும் நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது, மனுதாரர் உதய கம்மன்பில சார்பில் ஆஜரான அரசுத் தலைவர் சட்டத்தரணி மனோகர டி சில்வா, நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்து, வெளிநாட்டில் உள்ள தனது சேவை பெறுநர் இலங்கைக்குத் திரும்ப திட்டமிட்டுள்ளதாகவும், அவர் வந்தவுடன் விமான நிலையத்தில் கைது செய்யப்படும் அபாயம் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
முத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு 2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தரம் 6 தொடக்கம்
தரம் 11 வரை
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT


Study MBBS in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி13.09.2025இல் வெளியிடப்பெற்றது